## தமிழ்நாட்டு மக்களைப் பேணிக்காத்து தாயாக விளங்குபவர் நம் முதல்வர்!

# கலைஞரின் வாழ்க்கை வரலாறு கடல் போல் விரிந்துள்ளது!

## “கலைஞர் எனும் தாய்” நூல் வெளியீட்டு விழாவில் - நூலாசிரியர் - அமைச்சர் எ.வ.வேலு ஏற்புரை!

**சென்னை, செப். 2 -**

**சென்னை, - கலைவாணர் அரங்கில் நடைபெற்ற ‘கலைஞர் எனும் தாய்’ நூல் வெளியீட்டு விழாவில் ஏற்புரையாற்றிய நூலின் ஆசிரியர் - அமைச்சர் எ.வ.வேலு, “தமிழ்நாட்டு மக்களைப் பேணிக் காத்து தாயாக விளங்குகிறார் நமது முதல்வர் அவர்கள்” என்றும் “கடல் போல் விரிந்த ஒன்று, கலைஞரின் வாழ்க்கை வரலாறு” என்றும் குறிப்பிட்டார்.**

சென்னை - கலைவாணர் அரங்கில் 24.8.2024 அன்று தான் எழுதிய ‘கலைஞர் எனும் தாய்’ நூலின் வெளியீட்டு விழாவில் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆற்றிய ஏற்புரை வருமாறு:-

இந்த “கலைஞர் என்னும் தாய்” என்கிற புத்தகம் எழுதுவதற்கு எனக்கு உந்து சக்தியாக இருந்தது, தலைவர் கலைஞர் எழுதிய நெஞ்சுக்கு நீதியின் அத்தனை பாகங்களையும் நான் படித்திருந்தாலும்கூட, முதல் பாகத்தில் நமக்கு கிடைக்கப் பெறாத பல்வேறு செய்திகள் எல்லாம் அதில் இருந்தது. அதில் பக்கம் 581இல், அவர் தமிழ் மொழிக்காக பாளையங்கோட்டை சிறையில் இருந்த காலகட்டங்களில் “திருநெல்வேலியைச் சேர்ந்த சைவ சித்தாந்த நூற்பதிப்பகத்தார் எனக்கு ஒரு புத்தகத்தைக் கொடுத்தார்கள். அதுதான் ‘தாய்’ காவியம். ரஷ்ய எழுத்தாளர் மார்க்சிம் கார்க்கி எழுதிய ‘தாய்’ காவியத்தை நான் படித்தேன். பெருமைத்தக்க ஒரு இனிமையை நான் பெற்றேன்” என்று அவர் எழுதியிருந்தார். அதற்குப் பின்னால் அந்தப் புத்தகத்தை வாங்கிப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. சென்னையில் நியூ செஞ்சுரி புக் சென்டருக்குச் சென்று அந்தப் புத்தகத்தை வாங்கி வந்தேன். அது ஒரு காரணம்.

### கலைஞர் தான் எதிலும் முதல்வர்!

இன்னொன்று, மதுரை தியாகராஜர் கல்லூரியில் தமிழ்த்துறையின் தலைவராக பேராசிரியர் அ.சங்கர நாராயணன் என்று ஒருவர் இருந்தார். அவர் அவ்வை நடராஜனின் உறவினர். அவ்வை நடராஜனின் தந்தை பெயர் அவ்வை துரைசாமி. அவரையும் நான் அறிவேன். இந்த சங்கர நாராயணன் என்பவர், மதுரை தியாகராஜர் கல்லூரியின் தமிழ்த் துறையின் தலைவராக இருந்தவர். அவருக்கு வயது 85. “என்னைப் பார்க்க வேண்டும்... என்னைப் பார்க்க வேண்டும்” என்று இரண்டு நண்பர்களிடத்தில் சொல்லி அனுப்பினார். நானே அவரது இல்லத்திற்குச் சென்றேன். ஏனென்றால் அவர் பிறந்தது திருவண்ணாமலைக்குப் பக்கத்தில் இருக்கும் கீழாத்தூர். 85 வயது பெரியவர் நம்மை அழைக்கிறாரே என்று அவரது இல்லம் தேடிச் சென்றேன். அவர் மகன் தான் நம்முடைய தமிழ்நாடு அரசில் மெய்க்கண்ட தேவன் என்ற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்து பணியாற்றியவர். இந்த சங்கர நாராயணனிடம், “ஐயா... எங்களை வரச் சொன்னீர்களே... என்ன?” என்று கேட்டேன். அப்பொழுது சொன்னார், “நான் நேரடியாக தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞரைப் பார்க்க எனக்கு வாய்ப்பில்லை. பலமுறை நான் முயற்சித்திருக்கிறேன். ஆனால் நான் தமிழ்த் துறையில் இருந்து பல பேர் டாக்டர் பட்டம் பெறுவதற்கு உதவியாக இருந்திருக்கிறேன். நான் புறநானூறு, அகநானூறு, பல்வேறு இலக்கியங்களை நான் படித்திருக்கிறேன். ஆனால் நான் எண்ணிப் பார்க்கிறேன், என்னுடைய 85 வயதில் என்னுடைய தமிழ்த் தொண்டை நான் எண்ணிப் பார்க்கிறபோது, பல புலவர் பெருமக்களிடம் நான் பழகி இருக்கிறேன். ஆனால் எனக்கு ஆச்சரியத்தக்க செய்தி என்னவென்று சொன்னால், பட்டிமன்றமாக இருந்தாலும் முதலில் இருப்பவர் கலைஞராகத்தான் இருக்கிறார்; கவியரங்கமாக இருந்தாலும் அதில் முதல் ஆளாக இருப்பவர் கலைஞராகத்தான் இருக்கிறார்; திரையுலகம் என்று சொன்னால், அதிலும் கலைஞர்தான் முதல் ஆளாக இருக்கிறார். ஏன் அரசின் ஆட்சி என்று சொன்னாலும் அதிலும் இந்தியாவில் கலைஞர்தான் இருக்கிறார்; எனவே எதிலும் முதலாக இருப்பவர்” என்று சொல்லிவிட்டுச் சொன்னார், “இது அனைவருக்கும் சாத்தியக்கூறு அல்ல. கருவில் திரு இருந்தால்தான், இது அப்படி இருக்கும் என்று, எனவே கருவில் திரு என்கிற இந்தத் தாய்மை கலைஞருக்கு இருந்த காரணத்தினால்தான் இந்தியாவிலேயே முதன்மையான தாயாக இருக்கிறார்” என்ற இந்த செய்தியைச் சொல்லுங்கள் என்று என்னிடத்தில் சொன்னார். கோபாலபுரத்தில் நான் தலைவர் கலைஞரின் பக்கத்தில் இருக்கும்போது இந்தச் செய்தியைச் சொல்லும்போது, வானத்தில் இருக்கும் மதி முழு நிலவாக இருக்கும்போது எப்படி முகம் சிறப்பாக இருக்குமோ, அப்படி கலைஞரின் முகம் மலர்ந்ததை நான் பார்த்தேன்.

இந்தத் தாயைப் பற்றி ஒரு காவியத்தை நாம் எழுத வேண்டும் என்று அப்போதுதான் நான் முடிவெடுத்தேன். ஏறத்தாழ 11 ஆண்டுக் காலமாக, எப்போதெல்லாம் எனக்கு அரசுப் பணிகள் - கழகப் பணிகளில் இருந்து ஓய்வு கிடைத்ததோ, அப்போதெல்லாம் இரவு நேரத்தில் 11 மணிக்கு ஆரம்பித்து 12 முதல் 1 மணி வரைக்கும் இந்த தாய் காவியத்திற்கு பல்வேறு புத்தகங்களைப் படித்து அதன் குறிப்பெல்லாம் எடுத்து, ஒரு இலக்கை அமைத்துக் கொண்டு அதை நான் எழுதினேன்.

### அன்பால் உயிர்கள் ஒன்றாகும் – அறத்தால் உலகம் நன்றாகும்!

இதை யாரை வைத்து வெளியிடுவது என்று நான் யோசித்தபோது, நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப்போல, என்னுடைய அண்ணன் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற அந்த அளவுகோலை மட்டும் நான் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டிலேயே ஒரு மாமனிதர் இருக்கிறார் என்று சொன்னால், தமிழ்நாட்டு முதலமைச்சர்தான் மாமனிதர் என்கிற அந்த உணர்வோடு இன்றைக்கு தமிழ்நாட்டு மக்களை பேணிக் காப்பவராக இருக்கிற காரணத்தினால் தான் அவர் கையால் இதை நான் வெளியிட வேண்டும் என்று கருதினேன்.

பொன்னம்பல அடிகளார் அவர்கள் ஒரு கருத்தை இரண்டு வரிகளில் சொன்னார்கள். ‘அன்பால் உயிர்கள் ஒன்றாகும், அறத்தால் உலகம் நன்றாகும்’ என்கிற சித்



தாந்தத்தின் மூலமாக இன்றைக்கு பயணித்துக் கொண்டிருக்கும் தலைவர் யார் என்று சொன்னால், நம்முடைய அருமை அண்ணன் தளபதியார் அவர்கள்தான் என்பது வெளிப்படையான உண்மை.

### தமிழை – திராவிடம்தான் வளர்த்தது!

20-21ஆம் நூற்றாண்டுகளில் தமிழை திராவிடம்தான் வளர்த்தது. அதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. தமிழை வளர்த்தது என்று சொன்னால், கி.ஆ.பெ.விசுவநாதத்திலிருந்து - பேரறிஞர் அண்ணாவிலிருந்து தந்தை பெரியாரிலிருந்து - என் தலைவர் கலைஞர் முதற்கொண்டு இங்கே பட்டியல் போட்டார்கள் நம்முடைய அடிகளார் அவர்கள். எனவே, 20 - 21 ஆம் நூற்றாண்டில் நம்முடைய திராவிடம் தமிழை வளர்த்திருந்தாலும்கூட ஒரு காலத்தில் தமிழை வளர்த்தது பக்தி இலக்கியங்கள். அதை நாம் மறந்துவிட முடியாது. ‘என்னடா, ஒருபகுத்தறிவாளன் பக்தி இலக்கியத்தைப் பற்றிப் பேசுகிறான்’ என்றுகூட நீங்கள் எண்ணக்கூடும். ஆனால் உண்மை என்னவென்றால், பிற்பகுதியில் திராவிடம் தமிழை வளர்த்திருந்தாலும்கூட, தமிழை வளர்த்த பெருமை பக்தி இலக்கியத்திற்கு உண்டு. அந்த பக்தி இலக்கியத்தில் சைவ சமயத்தவர்கள் நான்கு பேர். அதில் இரண்டு பேர், ஒருவர் திருஞானசம்பந்தர், இன்னொருவர் மாணிக்கவாசகர். அந்தப் புத்தகத்தை நான் புரட்டியபோது அதில் ஒரு அருமையான வார்த்தை இருந்தது. ‘அவநீர் தாய் என நின்ற உகந்த தலைவன்’ என்ற ஒரு வார்த்தை இருந்தது. அதற்கு என்ன பொருள் என்றால், உலகுக்கே தாயாக நின்று மகிழ்ந்த தலைவன்.

மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகத்தில் என்ன சொல்கிறார் என்றால், ‘தாயிற் சிறந்த தயாவான தத்துவனே’ என்று எழுதியிருந்தார். அதற்கு என்ன பொருள் என்றால், தாய்போல் சிறந்த கருணை உள்ளம் கொண்டவர். ‘பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து’ என்பதன் பொருள், பசி வருமே குழந்தைக்கு என எண்ணி பாலாத்தும், பாலூட்டும் தாயைப் போல,

**‘ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன் மின்**

**பார்த்து இருந்து உண்மின் பழம் பொருள் போற்றன் மின்**

**வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்’** - என்று திருமந்திரம் இப்படித்தான் சொல்கிறது. அதற்கு என்ன பொருள் என்றால், யாராக இருந்தாலும் வேண்டியவர் வேண்டாதவர் என எண்ணாமல் உணவை கொடுங்கள், பொருளை வழங்குங்கள் என்று இன்றும் வழங்கும் அந்த திருக்கரத்தால்தான் தமிழ்நாட்டிற்கு தாயாக இருந்து இன்றைக்கு அறுசுவை சிற்றுண்டி அளித்துக் கொண்டிருக்கும் அவருடைய தாய்மையுள்ள திருக்கரத்தால் தாய் காவியத்தை அவர் மூலமாக வெளியிடவேண்டும் என்று நான் கருதினேன்.

எனவே, இன்றைக்கு தாய்நாட்டின் தாயாக இருந்து புத்தகத்தை வெளிக் கொண்டு வந்ததற்காக நம்முடைய அருமை முதல்வர் மு.க. ஸ்டாலின் என்ற அந்த மாமனிதருக்கு என்னுடைய சிரம் தாழ்ந்த நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்துக்கு நன்றி!

இந்த புத்தகத்தை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் முதல் பிரதியை பெற்றிருக்கிறார். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் என்று சொன்னால்,1975-ஆம் ஆண்டு அபூர்வ ராகங்கள் மூலமாகத்தான் தமிழ்நாட்டில் அவர் அறிமுகம் ஆனார். ஏறத்தாழ 49 ஆண்டு காலம். 49 ஆண்டு காலமாக ரஜினிகாந்த் என்பவர் இன்றைக்கு கலையுலகத்தின் காந்தமாக இருக்கிற காரணத்தால்தான் இன்றைக்கும் அவர் சூப்பர் ஸ்டாராகவே இருக்கிறார். எனவே கலையுலகத்தின் காந்தன் நம்முடைய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள். அவர் இது போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதே இல்லை. ஆனால் அவரிடத்தில் சொன்னேன். தலைவர் கலைஞரைப் பற்றி ஒரு தாய் காவியம் எழுதியிருக்கிறேன். அதை நீங்கள்தான் பெற வேண்டும். முதலமைச்சர் அவர்கள் அதை வெளியிட இருக்கிறார் என்று சொன்னவுடன், அடுத்த கணமே அவர் வேறு எதையும் எதிர்பார்க்காமல், ஆந்திரா - விசாகப்பட்டினத்தில் இன்றைக்கு அவருக்கு படப்பிடிப்பு இருக்கிறது. ஆனாலும்கூட அதை எல்லாம் விட்டுவிட்டு நேற்றைய தினமே இந்தப் புத்தகத்தை பெறுவதற்காக வந்திருக்கிற அவருக்கு என் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், யாருக்கும் தெரியாத ஒரு செய்தி. 1999-ஆம் ஆண்டுதான் ‘முதல்வன்’ என்கிற ஒரு படம் வந்தது. ஏனென்றால் திரைப்படத்தில் எனக்கு25 ஆண்டுகாலம் ஈடுபாடு உண்டு. நான் ஏற்கனவே டிஸ்ட்ரிபியூட்டர்ஆக - ப்ரொடியூசர் - ஆக இருந்த காரணத்தினால், அந்த நண்பர்களிடம் எனக்கு இப்போதும் பழக்கம் இருக்கிறது. ஏனென்றால் என்னைப் போன்றுப் ரொடியூசர் - ஆக இருந்த அண்ணன் தமிழ் அவர்கள் இப்போது சிரிக்கிறார். அதற்காகத்தான் சொல்கிறேன். அதாவது ஒரு நண்பர் என்னிடத்தில் சொன்னார், முதல்வன் படத்திற்கு ரஜினிகாந்த் அவர்களை எப்படியாவது ஒப்புதல் வாங்கி அதில் நடிக்க வைக்க வேண்டும் என்ற ஒரு முயற்சி நடந்தது. அவரிடத்திலேயே வந்து கேட்டார்கள். அது ஒரு அருமையான படம். நன்றாக ஓடும். அதனால் நீங்கள் அவசியம் அதில் நடிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அவர் ஒரே வரியில் சொன்னாராம், “தமிழ்நாட்டில் பெரியவர் ஆண்டு கொண்டிருக்கிறபோது, அதில் நடிப்பதற்கு எனக்கு உடன்பாடு இல்லை” என்று, அவர் அண்ணன் கலைஞர்தான் பெரிய உள்ளத்தோடு - பெரியவர் ஆண்டு கொண்டிருக்கிறபோது அந்த தலைப்பில்கூட நடிக்க மாட்டேன் என்று சொன்ன பெரிய உள்ளத்திற்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### திராவிட இயக்கத்தின் 5ஆம் தலைமுறை உதயநிதி ஸ்டாலின்!

இங்குவரவேற்புரை நிகழ்த்திய நம்முடைய அன்பிற்குரிய இளவல் அவர்கள், திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை அவர். நாம் இப்படித்தான் பட்டியல் போடுகிறோம். திராவிட இயக்கம் என்றால், தந்தை பெரியார் முதல் தலைமுறை; பேரறிஞர் அண்ணா இரண்டாவது தலைமுறை; என் தலைவர் கலைஞர் மூன்றாவது தலைமுறை; நற்றமிழ்நாயகர், தமிழ்நாட்டில்திராவிடமாடல்ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் என் அன்புத் தலைவர் நான்காம் தலைமுறை; இந்த திராவிட இயக்கத்தை இன்னும் 50 ஆண்டு காலத்திற்குக் கொண்டு செல்வதற்காக புறப்பட்டிருக்கும் இளைய சமுதாயம் நம்முடைய உதயநிதி திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை; நான் முக துதிக்காகச் சொல்லவில்லை. தமிழர்களுக்கு செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கிறது. அதற்காக அடையாளம் காட்டியிருக்கும் தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு இங்கு வந்திருக்கும் நம்முடைய கலைஞரின் உடன்பிறப்புகள் அத்தனை பேரின் சார்பாகவும் முதலமைச்சருக்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில், இளைஞர்களின் எழுஞாயிறாக இருக்கிறார்; வருங்கால தமிழ் சமுதாயத்தின் விடிவெள்ளியாக இருக்கும் நம்முடைய இளவல் அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஒப்புக்கொண்டு, என் சார்பாக - இல்லை... இல்லை... என் குடும்பத்தின் சார்பாக - இல்லை... நம்முடைய கழகக் குடும்பத்தின் சார்பாக இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வரவேற்புரை நிகழ்த்தியதற்காக நான் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### இளம் வயதில் என்னைப் பாராட்டிய பெரியவர் குன்றக்குடி அடிகளார்!

அதனைத் தொடர்ந்து இங்கே பொன்னம்பல அடிகளார் அவர்கள் சொன்னார்கள். உண்மைதான். அவரை நாம் அழைக்க வேண்டும் என்று நினைப்பதற்கு என்ன காரணம் என்றால், இதற்கு முன்னால் இருந்த அடிகளார் அவர்கள் அடிக்கடி திருவண்ணாமலைக்கு வருவார்கள். திருவண்ணாமலையில் அவர்கள் ஒருமுறை திருக்குறள் மாநாடு நடத்தினார்கள். அந்த திருக்குறள் மாநாடு ஐ.ஜி.ஆக இருந்த ஸ்ரீபால் அவர்கள், அவர் வந்தவாசியைச் சேர்ந்தவர் - எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்தவர். அந்த மாநாட்டில் பெரியவர் குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. எனக்கு அப்போது வயது 32 என்று நான் கருதுகிறேன். அதில் ஸ்ரீபால் அவர்களும், நானும் இளைஞர்களாக அந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகிற ஒரு வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு திருக்குறளைப் பற்றி நான் அதிகமாக பேசினேன், பல செய்திகள் எல்லாம் சொன்னேன். என்னை அழைத்து தட்டிக் கொடுத்து குன்றக்குடி அடிகளார் அவர்கள், “இதைத் தொடரு” என்று சொன்னார்கள். அதிலிருந்து நான் திருக்குறளைதொடர்ந்து படித்துக் கொண்டிருக்கிறேன்.

திருவண்ணாமலைக்கு வந்ததற்கு அவர்சொன்னகாரணமே குன்றக்குடி என்பது இப்பொழுது வந்ததுதானே தவிர, அது திருவண்ணாமலை ஆதீனம். அந்த திருவண்ணாமலை ஆதீனத்தை விட என்ன சிறப்பு என்று சொன்னால், அந்த பெரியவர் காலத்திலும் சரி, இவர் காலத்திலும் - திராவிடத்தையும் ஆன்மிகத்தையும் ஒன்றாக பேசுகிற அடிகளாக இருக்கிற காரணத்தால்தான் கழக நண்பர்கள் எப்போதும் உங்களைப் போன்ற அடிகளார்களை விரும்புகிறோம்.

ஏனென்றால், காலையில் தமிழ்க் கடவுள் என்று சொல்லப்படும் முருகனின் மாநாடு பழனியில் நடைபெறுகிறது. அந்த ஆன்மிக மாநாட்டில் கலந்துவிட்டு, இங்கு அறிவுப்பூர்வமான ஆண்டவர் - பெருமக்கள் - சான்றோர் பெருமக்கள் இருக்கும் இந்த மாநாட்டிலும் கலந்துகொண்டு உரை யாற்றிய உங்களுக்கு என் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### திராவிட சித்தாந்தத்தில் ஆர்வம் கொண்ட ‘இந்து’ ராம்!

அதேபோன்று, பத்திரிகை உலகத்தின் ஜாம்பவான் என்று சொல்லப்பட்டிருக்கும் நம்முடைய மதிப்பிற்குரிய இந்து ராம் அவர்கள். அவர் கல்லூரி காலத்திலேயே பொதுவுடைமை சித்தாந்தம் உள்ளவர். அவர் எப்படி என்றால், சில நேரங்களில் என்னுடைய நண்பர்கள் எல்லாம் என்னிடத்தில் கேட்பார்கள். பெரியவர் ‘இந்து’ ராம் அவர்கள், கலைஞர் காலத்திலும் சரி - இன்றைக்கு எங்களுடைய தலைவர் காலத்திலும் சரி, உரை நிகழ்த்துகிறபோது, அவருடைய சாயலில் எப்போதும் திராவிட சாயல் இருக்கும். அவர் படிக்கிற போதும் பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் அடிப்படையில்தான் வளர்ந்திருக்கிறார். வளர்ந்த பின்பு, இன்றைக்கு அவர் உரைகளை பார்க்கிறபோது திராவிட சித்தாந்தத்தில் அமைத்துக்கொண்டு அவர் உரை நிகழ்த்தியதை நான் பார்க்கிறோம். அதனால் அவரையும் அழைக்க வேண்டும் என அழைத்தோம். எனவே அவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, முத்தமிழறிஞர் அண்ணன் கலைஞர் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு; அவருடைய செயல்பாடுகள்; அவருடைய திறமைகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அது வங்காள விரிகுடா போன்றது. அதை வாரிக் கொள்ளலாம் என்றுதான் எனக்கு மிகவும் ஆசை. அதில் எனக்கு கிடைத்தது ஒரு வாளி தண்ணீர்தான். இந்த சாமானியனால் அதுதான் முடிந்தது. அந்த வாளித்தண்ணீரைத்தான் உங்களுக்கெல்லாம் பகிர்ந்து இருக்கிறேன். நிறைவு இருந்தால் போற்றுங்கள், குறைவிருந்தால் பொறுத்துக் கொள்ளுங்கள். கலைஞர் புகழ் என்றைக்கும் வாழ்க... வாழ்க... வாழ்க...

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.